இல்லை. மேலும், லால்குடியில் மகளிருக்கென்று தொழிற்பயிற்சி நிலையம் துவங்க தனியார் எவரேனும் முன்வந்தால், நிச்சயமாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு அது கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: *சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் சமீப காலமாக மாணவர்கள் சேர்வதில் ஆர்வம் குறைந்து வருகிறது. இப்படி ஆர்வம் குறைந்து வருவதற்குக் காரணம், படித்த பிறகு அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. எனவே வேலைவாய்ப்புடன்கூடிய தொழிற்பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி மையங்கள் 57. தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 615. இவற்றில் பெரும்பாலான பள்ளிகளில் அதிகமான மாணவர்கள் பயின்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 144, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

144—

மேல்நிலைத் தொட்டி

***23289—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மகாதேவபட்டினம் கிராமத்தின் தேவை கருதி, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2005 மார்ச் 14]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மன்னார்குடி ஒன்றியம், மகாதேவபட்டினம் குடியிருப்பில், ஏற்கெனவே 1988 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுடன்கூடிய தனி மின் விசைத் திட்டம் தற்போது மக்கள் பயனில் உள்ளது. மேலும் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பகுதி மக்களின் தேவையை அறிந்து ஆணையிட்டதற்கிணங்க, 2002-2003 ஆம் ஆண்டு 3 சிறு மின் விசைத் திட்டங்களும், 2003-2004 ஆம் ஆண்டு 2 சிறு மின் விசைத் திட்டங்களும், 2003-2004 ஆம் ஆண்டு மகாதேவபட்டினம் மெயின் ஆதிதிராவிடர் காலனியில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது மக்கள் பயனில் உள்ளது. மேலும், 2004-2005-ல், நானாசாகிப் தோட்டம், அம்பலத்துக்காரர் தெருவிலே, 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவிலும், மேலப்பேட்டை ரோடில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு, அவை தற்போது பயனில் உள்ளன. ஆகவே, மேற்குறிப்பிட்ட நீராதாரங்களிலிருந்து பொது மக்களுக்கு தினசரி 2 வேளை போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேற்கொண்டு ஒரு இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அவசியமில்லை.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகாதேவபட்டினம் கிராமத்திலே அமைக்கப்பட்டிருக்கிற நீர்நிலைகளைப் பற்றிச் சொன்னார்கள். இந்தக் கேள்வி, ரொம்ப முன்னால் போடப்பட்ட கேள்வி. நிறைவேற்றப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது. அதே நேரத்திலே, இந்தப் பட்டியலைச் சொல்லியிருக்கிற அமைச்சர் அவர்களது பதிலில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டிருப்பது பற்றிய அந்தப் பட்டியல் மட்டும் ஏன் வெளிவரவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அதையும் அதிகாரிகள் கொடுக்கவில்லையா அல்லது நீங்கள் அதைத் தெரிவிக்க மறுக்கிறீர்களா என்பது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: இந்தக் கேள்வி போட்டதற்குப் பின்னாலே ஏற்பட்ட நிலைமைகளின் காரணத்தினாலே, அவசர உணர்வோடு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலமாக அது

அமைக்கப்பட்டு, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, துணைத் தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்த மாதிரிக் கேள்விகள்--முடிந்துபோன கேள்விகளுக்குரிய பதில்களைச் சொல்வதையே மரபாகக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. பல கோரிக்கைகள், நிறைவேறாமல் இருக்கிற கோரிக்கைகள் அடங்கிய அந்தக் கேள்விகளை எடுத்துக்கொள்வது என்பது உசிதமாக இருக்கும். முடிந்த கேள்விகளுக்குப் பதிலைச் சொல்லி திருப்திபடுவது என்பது எந்த வகையில் சரியாக இருக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 145, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

145—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***23319—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுக் குடிநீர்த் திட்டம் சுட்டிகாலடிபட்டி, அவ்வையம்பட்டி, நரியூத்து, காமலாபுரம், சக்கையநாயக்கனூர், புதுசத்திரம், கோடாங்கிநாயக்கன்பட்டி உட்பட 20 கிராமங்களுக்குச் செயல்படுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஒன்றியத்தில், குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள எரிலோடு, பிள்ளையார்நத்தம், கூவானூத்து, சிலுக்குவார்பட்டி, பள்ளப்பட்டி, பாளையகவுண்டன்பட்டி, நரியூத்து, கோட்டூர், கோடங்கிநாயக்கன்பட்டி, நூதலாபுரம், ஜம்பத்தூர்கோட்டை மற்றும் பச்சைமலையான்கோட்டை ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 54 கிராமக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆணை எண் 8, நாள் 21-2-2005-லே ரூபாய் 564.55